TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

U/s 173 BNSS

C 8167227

1. District : மாவட்டம் Salem | PS: காவல்நிலையம் V4 AC | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 14/AC/2024 | Date: நாள் 27.11.2024

2. (i) Act சட்டம்: PC Act 1988 amended in 2018 | Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 03.10.2024/14.20 Hrs

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 25.11.2024/11.30 Hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.11.2024 | Time : நேரம் 06.15 Hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.11.2024 | Time : நேரம் 06.15 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Valapady Taluk Office, Approximately 32 Kms East.

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Taluk office, Valapady, Salem District.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. M. Yogeswaran | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Murugesan

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 24 yrs | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி Periyagoundapuram Vill, Karipatti via, Valapady Taluk, Salem District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Karthikeyan, Assistant, Valapady Taluk Office, Salem District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Yogesh 27/11/24

[signature] 27/11/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

27.11.2024
08.30 Hrs.

Name: பெயர் S. MURUGAN
Rank: நிலை Inspector of Police No. எண் ..........

சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 14/AC/2024 சட்டப்பிரிவு 7(a) of PC Act 1988 as amendment in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

---

சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டம் பெரியகவுண்டாபுரம் கிராமத்தை முருகேசன் மகன் திரு.யோகேஸ்வரன் என்பவர் இன்று 27.11.2024ம் தேதி காலை 06.15 மணிக்கு சேலம் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் ஆய்வாளிடம் கொடுத்த கணினி தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துமூலமான புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் M.யோகேஸ்வரன், த/பெ முருகேசன், பெரியகவுண்டாபுரம் அஞ்சல், காரிப்பட்டி வழி, வாழப்பாடி வட்டம், சேலம் மாவட்டம், பெறுதல், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சேலம் மாவட்டம், ஐயா, நான் பெரியகவுண்டாபுரத்தில் என் அப்பா அம்மாவுடன் குடியிருந்துவருகிறேன். நான் BE படித்து முடித்துவிட்டு தற்போது, பொள்ளாச்சியில் செயல்படும் தனியார் கம்பெனியில் வேலைசெய்துவருகிறேன். எங்களுக்கு சுமார் 1.12 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் விவசாயமும் செய்துவருகிறோம். எங்களது கிராமத்தில் உள்ள மலைப்பகுதியிலிருந்து எங்களது கிராமத்தின் வழியாக பாம்பூத்து ஓடை செல்கிறது. அந்த ஓடையின் இருபுறமும் உள்ள விவசாய நிலங்களின் உரிமையாளர்கள் அந்த ஓடையில் மண்ணை கொட்டி அதனை நடைபாதையாக மாற்றிவிட்டார்கள். அதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதோடு மட்டுமன்றி, ஓடை நிரந்தரமாக அழிந்துவிடும் நிலை உள்ளது. எனவே, மேற்படி ஓடையை சர்வேயர் மூலமாக துல்லியமாக அளந்து, அத்து கல் பதித்து, ஓடையில் மேடாக உள்ள மண்ணை வெளியே எடுத்து அப்புறப்படுத்தி, ஓடையை பழைய நிலைக்கு புனரமைப்பு செய்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு கேட்டு, 31.07.2023 தேதியில் என்னுடைய அப்பா வாழப்பாடி வட்டாட்சியருக்கு மனு அனுப்பினார். அவர் அனுப்பிய மனுமீது எந்த நடவடிக்கையும் எடுக்காததால், வாழப்பாடி வட்டாட்சியரையும் ஒரு எதிர் மனுதாரராக குறிப்பிட்டு பெரியகவுண்டாபுரம் கிராம சர்வே எண் 169-ல் உள்ள பாம்பூத்து ஓடையை அளந்து எல்லை குறிப்பிட்டு தூர்வார நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P.No. 1397/2024-ன் படி என்னுடைய அப்பா வழக்கு தொடர்ந்தார். அதனடிப்படையில், உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்கள் சம்மந்தப்பட்ட நீரோடையை அதன் பழைய நிலைக்கு மீட்டமைக்க 23.01.2024ம் தேதியில் சென்னை உயர்

நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அதன் பின்னரும் வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலக அதிகாரிகள் பாம்பூத்து ஓடையை தூர்வார முறையாக நடவடிக்கை எடுக்காததால், என்னுடைய அப்பா வழக்கு எண் 2645/2024ன்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. அது சம்மந்தமாக, நானும் என்னுடைய அப்பா முருகேசன் அவர்களும் வாழப்பாடி வட்டாட்சியர் திருமதி.ஜெயந்தி அவர்களை 03.10.2024ம் தேதி மதியம் சுமார் 2.20 மணிக்கு மணிக்கு வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் சந்தித்து, என்னுடைய அப்பா அனுப்பிய மனு மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டோம். அதற்கு அவர், அந்த அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் கார்த்திகேயன் என்பவரை சந்திக்குமாறு சொன்னார். நாங்கள் இருவரும் உடனடியாக அந்த அலுவலகத்திலிருந்த உதவியாளர் திரு.கார்த்திகேயன் அவர்களை சந்தித்து விவரங்களை தெரிவித்தோம். அப்போது, அவர் தனக்கு தனியாக ரூபாய் 5,000/-ம் வட்டாட்சியருக்கு கொடுப்பதற்காக ரூபாய் 10,000/-ம் கொடுக்கவேண்டும் எனவும், அப்போதுதான், பாம்பூத்து ஓடை சம்மந்தப்பட்ட இடங்களை அளந்து எல்லை குறித்து தர ஏற்பாடு செய்யமுடியும் என்று சொன்னார். நாங்கள் தற்போது அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டோம். இந்த சூழ்நிலையில், பாம்பூத்து ஓடை சம்மந்தப்பட்ட பெரியகவுண்டாபுரம் சர்வே எண் 186, 187, 188 ஆகியவற்றை சர்வேயர் மூலமாக அளவீடு செய்து, அதன் எல்லையை குறிப்பிட்டு அத்துகல் நட்டு, ஓடையை தூர்வார நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு, என்னுடைய அப்பா 09.10.2024ம் தேதியில் வாழப்பாடி வட்டாட்சியருக்கு பதிவு தபாலில் மனு அனுப்பினார். பின்னர், 25.11.2024ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று, நானும் என்னுடைய அப்பா முருகேசன் அவர்களும் உதவியாளர் திரு. கார்த்திகேயன் அவர்களை சந்தித்து, பாம்பூத்து ஓடை சம்மந்தப்பட்ட நிலங்களை அளந்து எல்லை குறிப்பிட்டு ஆக்கிரமிப்புகளை அகற்றுவது பற்றி கேட்டபோது, ஏற்கனவே, தான் கேட்டவாறு தனக்கு தனியாக ரூபாய் 5,000/-ம், வட்டாட்சியருக்கு தனியாக ரூபாய் 10,000/- கொடுத்தால்தான் அதற்கு ஏற்பாடு செய்யமுடியும் என்று சொன்னார். நான் கொஞ்சம் குறைத்து சொல்லுமாறு கேட்டேன். அதற்கு அவர், தான் கேட்டவாறு பணம் கொடுத்தால்தான் பாம்பூத்து ஓடை சம்மந்தப்பட்ட நிலங்களை அளந்து எல்லை குறித்து அத்துகல் அமைத்து தூர்வார ஏற்பாடு செய்யமுடியும், இல்லையென்றால் அந்த வேலையை செய்யமுடியாது என்று முடிவாக சொல்லிவிட்டார். தான் கேட்ட பணத்துடன் வந்து வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் தன்னை எப்போது வேண்டுமானாலும்

பார்க்குமாறும் சொன்னார். அதனால் நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். உதவியாளர் கார்த்திகேயன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து பாம்பூத்து ஓடை சம்மந்தப்பட்ட நிலங்களை அளந்து எல்லை கல் அமைத்து தூர்வார ஏற்பாடு செய்ய எனக்கு விருப்பமில்லை. அவர் கேட்ட பணம் ரூபாய் 15,000/-த்துடன் சென்று, அவர் சொன்னபடி இன்று அவரை சந்திக்க முடிவு செய்துள்ளேன். எனவே, அவர்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/- xxxxxxxx (யோகேஸ்வரன்) 27.11.2024. மேற்படி புகாரைப் பெற்று, எதிரியின் பொதுப்படையான நற்பெயர் குறித்தும், புகார்தாரரின் முன் நடத்தை பற்றிய விவரங்கள் குறித்தும் ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, புகாரின் தன்மை குறித்து திருப்தியடைந்த பிறகு, புகாரின் தன்மைப்படி இன்று 27.11.2024ம் தேதி காலை 08.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 14/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 படி வழக்கு பதிவு செய்து, முதல் தகவலறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை ஊழல்தடுப்பு வழக்குகள் விசாரணைக்கான மாண்புமிகு சிறப்பு நீதிமன்றம், சேலத்திற்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

27/11/2024
Inspr. VAC AC, Salem.